www.Padasalai.Net www.CBSEtips.in

# முதல் இடைப் பருவத் தேர்வு – 2022

8 - ஆம் வகுப்பு

## அறிவியல்

பதிவு எண். | | | | | | |

காலம் : 1.30 மணி மதிப்பெண்கள் : 50

**I சரியான விடையைத் தேர்ந்தெடு.** 10 X 1 = 10

1. மின்னோட்டம் என்பது .......................... அளவு ஆகும்.
அ) அடிப்படை ஆ) துணை நிலை இ) வழி ஈ) தொழில் சார்ந்த
2. ஒளிச்செறிவு என்பது ........................ ன் ஒளிச்செறிவாகும்.
அ) லேசர் ஒளி ஆ) புற ஊதாக்கதிரின் ஒளி
இ) கண்ணுறு ஒளி ஈ) அகச்சிவப்புக் கதிரின் ஒளி
3. அழுத்தத்தின் அலகு ................ .
அ) பாஸ்கல் ஆ) $Nm^{-2}$ இ) பாய்ஸ் ஈ) அ மற்றும் ஆ
4. பாஸ்கல் விதி இதில் பயன்படுகிறது
அ) நீரியல் அழுத்தி ஆ) தடை செலுத்தி (பிரேக்)
இ) அழுத்தப்பட்ட பொதி ஈ) மேற்கண்ட அனைத்தும்
5. வெப்பநிலைமானிகளில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம்
அ) தாமிரம் ஆ) பாதரசம் இ) வெள்ளி ஈ) தங்கம்
6. மின்சாரத்தை கடத்தும் அலோகம்
அ) கார்பன் ஆ) ஆக்சிஜன் இ) அலுமினியம் ஈ) சல்ஃபர்
7. ................ உலோகம் துருப்பிடித்தலுக்கு உள்ளாகிறது
அ) வெள்ளியம் ஆ) சோடியம் இ) காப்பர் ஈ) இரும்பு
8. .................. ஒரு புரோகேரியோட்டிக் நுண்ணுயிரியாகும்.
அ) வைரஸ் ஆ) ஆல்கா இ) பூஞ்சை ஈ) பாக்டீரியா
9. உயிருள்ள மற்றும் உயிரற்றவைகளின் பண்புகளைப் பெற்றவை ........... .
அ) புரோட்டோசோவா ஆ) வைரஸ் இ) பாக்டீரியா ஈ) பூஞ்சை
10. மண் அரிப்பைத் தடுக்கும் தாவரங்கள்
அ) பாசிகள் ஆ) பூஞ்சைகள் இ) பிரையோஃபைட்டுகள் ஈ) டெரிடோஃபைட்டுகள்

**II கோடிட்ட இடத்தை நிரப்புக.** 5 X 1 = 5

11. ஒரு பொருளின் குளிர்ச்சி அல்லது வெப்பத்தின் அளவானது .................... என குறிப்பிடப்படுகிறது.
12. எளிய பாதரசமானி முதன் முதலில் .................. என்பவரால் உருவாக்கப்பட்டது.
13. ............. தொழிற்சாலைகளில் யூரியா தயாரிப்பதில் அடிப்படைப் பொருளாக உள்ளது.
14. நுண்ணுயிரிகளை ............. ன் உதவியுடன் காண முடியும்.
15. வகைப்பாட்டில் என்ற சொல் ............. மொழியிலிருந்து பெறப்பட்டது.

**III சுருக்கமாக விடையளி. (ஏதேனும் 10 ற்கு மட்டும்).** 10 X 2 = 20

16. வெப்பநிலையை அளவிடப்பயன்படும் அலகுகளைக் கூறு.
17. மோல் - வரையறு.



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

18. ஒப்பிட்டு விடை தருக.

அ) நூலில் போடப்பட்டுள்ள முடிச்சு : நிலை உராய்வு : :
பந்து தாங்கிகள் : .................. உராய்வு.

ஆ) கீழ்நோக்கிய விசை எடை : :
திரவங்களால் தரப்படும் மேல்நோக்கிய விசை : ..................... .

19. பொருத்துக.

அ) இரும்பு - மின்கம்பிகள் தயாரிக்க
ஆ) தாமிரம் - தையல் ஊசி தயாரிக்க
இ) டங்ஸ்டன் - இராக்கெட் எரிபொருள் பற்றவைப்பானாக
ஈ) போரான் - மின் விளக்கிற்கான இழைகள் செய்ய

20. பின்வரும் தனிமங்களின் குறியீடுகளை எழுதுக.

அ) ஆக்சிஜன் ஆ) தங்கம் இ) கால்சியம் ஈ) இரும்பு

21. வினைவேக மாற்றம் என்பதை வரையறு.

22. சரியா அல்லது தவறா என எழுதுக. தவறான வாக்கியத்தை திருத்தி எழுதுக.

அ) ஒரு வேதிவினை என்பது தற்காலிக வினையாகும்.
ஆ) சுட்ட சுண்ணாம்பிலிருந்து நீற்றுச் சுண்ணாம்பு உருவாவது ஒரு வெப்பம் கொள்வினையாகும்.

23. மாசுபடுதல் என்றால் என்ன?

24. ஏதாவது மூன்று புரோட்டோசோவாக்களின் பெயர்களை எழுதுக.

25. எதிர் உயிர்க்கொல்லி என்றால் என்ன?

26. இருவிதையிலைத் தாவரங்களின் இரு பண்புகளை எழுதுக.

27. பொருத்துக.

அ) சையனோஃபைசி - பச்சைப்பாசி
ஆ) குளோரோஃபைசி - நீலப்பச்சைப்பாசி
இ) பேயோஃபைசி - சிவப்புப்பாசி
ஈ) ரோடோஃபைசி - பழுப்புப் பாசி

IV. **விரிவாக விடையளி.** 3 X 5 = 15

28. அ) கடிகாரங்களின் வகைகளைப் பற்றி சிறு குறிப்பு வரைக. **(அல்லது)**
ஆ) உராய்வு எவ்வாறு குறைக்கப்படுகிறது என்பதை விளக்குக.

29. அ) உலோகங்களுக்கும், அலோகங்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை அட்டவணைப்படுத்துக. **(அல்லது)**
ஆ) 1) வேதிவினை என்பதை வரையறு. 2) ஒரு வேதிவினை நிகழ்வதற்குத் தேவையான பல்வேறு நிபந்தனைகளை எழுதுக.

30. அ) மருத்துவத்துறையில் நுண்ணுயிரிகள் எவ்வாறு பயன்படுகின்றன? **(அல்லது)**
ஆ) ஜிம்னோஸ்பெர்ம்களின் பொருளாதார முக்கியத்துவத்தை எழுதுக.



Scanned with OKEN Scanner
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com